# தேவன் என்னைத் தேடி வரும் நேரம்

தேவன் என்னைத் தேடி வரும் நேரம்
ஆனந்தக் கவிதை இதயத்தில் அரங்கேறும்
அந்த இதயம் பாடும் ஒரு கீதம் - இந்த
உலகம் காணும் புது உதயம் - ( 2 )

**1**
வானம் பார்க்கும் பூமியைப்போல் - என்
மனமும் உன்முகம் பார்க்கின்றதே - ( 2 )
அருளின் முகிலே வா அன்பின் மழையே வா
நினைவினில் நிதம் நான் வாழ்ந்திடவே
நிறைவினில் உறவுகள் மலர்ந்திடவே – ( 2 )

**2**
நீரினை நாடும் மான்களைப்போல – என்
நெஞ்சம் உன்னகம் தேடுதே ( 2 )
நீதியின் கதிரே வா தீதில்லா திருவே வா
இழப்பதில் இன்பம் கண்டிடவே
இகமெல்லாம் ஒன்றெனக் கொண்டிடவே –( 2 )